ஸ்ரீ திரிபுரசுந்தரீசமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

# ஆர்ய தர்மம்.

வாக்கை யடைந்ததன் பயன் கண்டபடி பேசுவதென்று சிலர் நினைப்பார்கள். அது சரியல்ல, ஆனால் தமக்காவது பிறர்க்காவது அறம், பொருள், இன்பம், முதலியவை கிடைக்கும்படி பேசுவதே வாக்கைப் படைத்ததின் பயனும். ஆகவே பயன்பட உரைக்கவேண்டும்.

கண்டவர் கையைப் பிடித்துக் குலுக்கவும், கிடைப்பதையெல்லாம் வாங்கவும், மற்றுமிம்மாதிரிக் கார்யங்களுக்காகவும் கைகள் கொடுபடவில்லை. பகவானைப்பூஜிப்பது முதலிய புண்ணியகார்யங்களைச் செய்வதற்காகவே கொடுக்கப்பட்டன.

கால்களும் கெட்டவிடங்களிற் செல்லுவதற்காக ஏற்படவில்லை. புண்ணியதீர்த்தங்களுக்கும் புண்ணிய க்ஷேத்திரங்களுக்கும் போய் வருவதற்காக ஏற்படுத்தப்பட்டதாகும். மற்ற இரண்டுகர்மேந்திரியங்களும் உசிதகார்யத்திற்காகவே யொழிய பாபத்தைத் தேடுவதற்கல்ல.

பகவானுடைய திருமேனியையும், பெரியோரையும் பார்ப்பதற்குக் கண் அமைக்கப்பட்டதே யன்றி நாடகம்பார்க்கவும், காதலுற்றவரைக் காணவும் கிடைத்ததில்லை. அப்படியாயின் அது முகத்தின் புண்ணேயன்றி கண்ணேயல்ல.

செவிகளும்—சுருதியையும், ஸதாசாரியாளது ஸதுபதேசங்களையும், மஹான்களின் புண்ணிய சரித்திரங்களையும், கேட்பதற்காகக்கிடைத்ததேயன்றி கண்ட கதைகளைக் கேட்க ஏற்பட்டதில்லை. அப்படியாயின் அது முகத்தினகத்தொரு பொந்தேயன்றி காதேயல்ல.

தேவதைகளுக்கும், அதிதிகளுக்கும் அர்ப்பணம் செய்து மிகுந்த அமிர்தமெனப்படும் அறுசுவை நிறைந்த அன்னத்தை அருந்தி, சத்துவ குணத்தை மனதில் விருத்திசெய்யச் சாதகமாக நாவு படைக்கப் பட்டதேயன்றி கண்டதைத்தின்று கொழுப்பை யடைவதற்கல்ல.

பகவானது திருவடிகளில் பக்தியாகப் போடப்பட்ட பில்வம், துளசி முதலிய பத்திர புஷ்பங்களின் வாஸனையை முகர்வதற்காக மூக்குக் கொடுக்கப்பட்டதே யன்றி அசுப விஷய வாஸனைகளை முகர்வதற்காக இல்லை. அவ்வாறாயின் அது புற்றேட்டையே.

ஸாதுக்களின் ஸ்பார்சன தீக்ஷை பெருவதற்காக ஸ்பரிசேந்திரியம் விருஷ்டிக்கப்பட்டதேயன்றி ஸாஹஸகார்யங்களைச்செய்வதற்கில்லை. இவ்வாறு நல்ல கார்யங்களைச்செய்துநன்மையை அடையவேண்டியதற்காகவே கடவுளால் விருஷ்டித்துக்கொடுக்கப்பட்ட கர்மேந்திரிய ஞானேந்திரியங்களால் பிராணிகள் பாபத்தைத் தேடிக்கொள்ளாமல் புண்ணியத்தையே பெரிதாகத்தேடி புருஷார்த்தங்களையடைந்து சிறுவர்களும் க்ஷேமத்தை யடையும்படி செய்து தேசக்ஷேமத்தைச் செய்வார்களாக. சுபம்.

பத்திராதிபர்.

# ஆர்யதர்மம்,

ப்ரமோத-ஸூ தை-மீ ௨௩௨


## ஆத்துமகுணங்கள் எட்டு.

### தயை.

அந்த ஆத்துமகுணங்கள் எட்டென்று கௌதம தர்மஸூத்திரத்தில் கூறப்பட்டிருக்கின்றது- அவையாவன 1. தயை. 2. பொறுமை. 3. பொறாமையில்லாமை. 4. சௌசம். 5. ஆயாசமின்மை 6. மங்களம். 7. கார்ப்பண்யமில்லாமை 8. ஆசையொழித்தல் இவைகளாம். இவைகளின் சொரூபம் பிருஹஸ்பதிபகவானால் கூறப்பட்டிருக்கின்றது. அவற்றுள் தயையைப்பற்றி—

परे वा बन्धुवर्गे वा मित्रे द्वेष्टिरि वा सदा ।
आपदो रक्षणं यत्तु सा दया परिकीर्तिता ॥

“பிறனிடத்தும், பந்துவர்க்கத்தாரிடத்தும், சிநேகிதனிடத்தும், சத்துருவினிடத்திலும் எப்பொழுதும் வேற்றுமையைப் பாராட்டாமல் அவர்களுக்கேதேனும் ஆபத்து நேர்ந்துவிட்டால் அதிலிருந்து அவர்களை ரக்ஷிப்பது தயையெனப்படும் என்று கூறியிருக்கிறார். ஆபத்து என்றால் பிராணத்தியாகம் நேரும் ஸமயமென்று வியாஸபகவான் ப்ரம்மஸூத்திரத்தில் கூறுகின்றார். ஆனால் உலகத்தில் சிரியகஷ்டம் நேருவதையும் ஆபத்தாக வியவஹரிக்கிறார்கள். சரீரசிரமம், பொருள்சேதம், முதலியவை நேருமிடத்து ஆபத்தாய் முடிந்துவிட்டதென்று சொல்லிக்கொள்ளுகிறார்களல்லவா? அகார்யத்தில் பிரவிருத்தித்து சிரமப்படுவோனையும் ஆபத்தடைந்தவனாகக் கருதுகின்றார்கள். அதுபோலவே அதர்மங்களில் தலையிட்டுப் பொருளிழந்தவனையும் அப்படி நினைக்கிறார்கள். ஆனால் இவையெல்லாம் ஆபத்தாகாது. அதிலிருந்து இவர்களை ரக்ஷிக்க நினைப்பதும் தயையாகாது. அகார்யத்தில் பிரவிருத்தித்த தோஷத்தால் அவர்களை சிக்ஷிப்பதே நலமேயன்றி ரக்ஷிப்பது உண்மை

யில் நலமாகாது. சிறுபையன்களைப் படிக்கச்சொன்னால் அதை அவர்கள் ஆபத்தாக நினைக்கிறார்கள். அப்பொழுது அவர்களை சிக்ஷிப்பதுதான் நன்மையேயன்றி படிக்காமல் அவனிஷ்டப்படி விட்டு விடுவது தீமையேயாகும். ஆகவே பாபகார்யம் செய்வோர் அந்தப் பாபகார்யமூலமாகக்கஷ்டப்படுவார்களானால் அவர்களையு பேக்ஷிக்க வேண்டுமேயல்லாது ரக்ஷிப்பது உசிதமாகாது. உதாரணமாக திருட்டுத்தனமுள்ள ஒருவன் அந்தத்திருட்டு நிமித்தமாகப் போலீஸாரிடம் அகப்பட்டு அடிபட்டுக்கஷ்டப்படும்பொழுது அவன் பந்துவாயினும் உபேக்ஷிக்கத் தக்கவனேயன்றி அவனை ரட்சிக்க முயலுவது கெடுதலாகவே முடியும். அதனாற்றான் பதஞ்சலி பகவானும் பாபகாரிகளிடத்தில் உபேக்ஷையை உபதேசித்தார். அவர்களுக்கே பிராணன் போய்விடும்படியாக நேர்ந்தால் அப்பொழுது உபேக்ஷை கூடாது. இயன்றவரை உபகரிக்கவேண்டும். ஏனெனில் — பிராணாபத்துள்ளவன் பாபியாயினும் அவனை அதிலிருந்து இரட்சித்துவிட்டால் ஒரு சமயம் நல்ல புத்தியைப் புகட்டிப் பாபபுத்தியை விலக்கி சுபபலனை அடையச்செய்யலாமல்லவா. பிராணன் போய்விட்டால் நாகத்தையே அடைந்துவிடுவான். ஸ்ரீபகவானும் "क्षिप्रंभवति धर्मात्मा" மஹாபாபியாயினும் பிராணாபத்திலிருந்து இரட்சிக்கப்பட்டு பெரியோர் தயவுக்கு பாத்திரமானால் சீக்கிரம் தர்மபுத்தியுள்ளவனாகவுமாய் விடலாம் என்று அபிப்பிராயப்படுகிறார். சிலர் க்ஷேமகரமான கார்யத்தையும் ஆபத்தாக நினைப்பார்கள். அப்படியே பிரஸங்க மேடைகளிலும் சொல்லுவார்கள்.

உதாரணமாகச் சிலர் வர்ணாசிரமதர்ம நியமம் நம் பாரதநாட்டில் நேர்ந்துவிட்டது பரமாபத்தாய் முடிந்துவிட்டதாக நினைக்கிறார்கள். இது உண்மையில் ஆபத்தாகமாட்டாது. சிலருக்கு அப்படித் தோன்றுவது பிராந்தியேயல்லாது வேறில்லை. ஆகவே அதை விலக்கமுயல்வது ஹிம்ஸையேயன்றி தயையாகமாட்டாது. "ஸர்வதேசத்திலும், ஸர்வகாலத்திலும், ஸர்வஜாதியாரிடத்திலும் ஸர்வாவஸ்தையிலும், ஸர்வவிதத்திலும், அஹிம்ஸாதிகளைப்பாராட்டவேண்டும். அது மஹாவிரதமாகும்" என்று யோகஸூத்திரத்தில் கூறியிருப்பது நிரோதஸமாதி செய்யும் அந்தர்முகனைப்பற்றியே அன்றி எல்லோரையும் பற்றியதல்ல. அதிலும் புண்யாத்மாக்கள் விஷயத்திலேயே அன்றி பாபியின் விஷயத்திலில்லை. ஆகவே

ஸர்வப்பிராணிகளிடத்தில் தயை அடையவேண்டுமென்றதற்காகப் பாபிகளிடத்திலும் தயையைக்காட்டிவிடுவது அவர்களைக்கெடுத்த தாக ஆகுமேயன்றி இரட்சித்ததாக ஆகமாட்டாது. ஆகையால் அவர்களையும் நல்ல சிக்ஷையில் கொண்டுவந்து க்ஷேமத்தையடை யச் செய்வதே அவர்கள் விஷயத்தில் தயையாகும். அன்றியும் யாகாதிகளைச் செய்வோருக்குப் பிராணிதயை கிடையாதென்று சிலர் கொண்டிருக்கும் கருத்து தவறேயன்றிசரியானதல்லஎன்று தயையின் சொரூபத்தைத் தெரிந்து அந்த உத்தமகுணத்தை அடைந்து யாவரும் க்ஷேமத்தை அடைவார்களாக.

சுபம் !

பத்திராதிபர்.

# கன்மம்.

(30-வது பக்கத்தொடர்ச்சி.)

ஒருக்கால்அக்கர்மாக்களின் பயன் இன்னதென்றுஅறியாது அனுஷ்டிப்பினும் பயன்படுமேயன்றி வீணுகாது. ஆயினுமறிந்து செய்பவனுக்கு சூக்ஷ்மமான பயன்வெளியாகுமாதலால்அவ்விதப் பயன்களைப்பெறுவது அவனுக்கு மிக சுலபமாம். இவ்வித கர்மாக் களைப்செய்பவர்ஒவ்வொருவரும்தத்தமினங்களைக் கண்டெடுப்பது அதிசுலபமாதலாலும் அவ்வித ஒற்றுமைக்கு முதற்காரணமாய் இக்கர்மா இன்றியமையாததென்பது பெரியோர்களின் சம்மதம்.

எல்லா தேசத்திற்கும் சுகத்தைக்கொடுக்கும் கர்மாக்கள் உண்டு. உலகில் எவனும் முற்றிலும் கர்மாவை விட்டவனில்லை. பயனற்ற கன்மமுமில்லை. கர்மாக்களைச் செய்தும் அவைகளை ஈச்வரார்ப்பணம் செய்பவர் ஒருவரே கர்மவலையினின்றும் கடந்த வரெனப்படுவர். அவர்களே யோகி எனவும்அழைக்கப்படுவார்கள். நம்போன்ற மற்றவர்கள் எக்காலத்திலும் கர்மத்தைவிட்டொழித் தல் கூடாதுபற்றி நமக்கு கர்மமே கதி. ஆயினும் கர்மமென்பது இன்னின்னதென இத்தேசத்தில் துணியப்படாததாயினும் அவ் வவ்வதேசத்தார் அதை நிச்சயஞ்செய்கிறார்கள்.

கன்மங்களுக்கு யாம் காணக்கூடிய பயன் யாதென்பதை சிறிதாராய்வோம். இதனுட் கருத்து— கன்மங்கள் புண்யபா

பங்களெனவும் அவைகள்அனுதிகளெனவும் அவைகளைக் கைக் கொள்வது நற்பயனைக் கருதியேயெனவும் அக்கன்மங்களை அனுஷ்டிப்பவர் பயன் பெறுவதுண்மையெனவும் கூறினோம். மருந்து முதலியவற்றால் ரோகங்கள் ஒழியக்காண்பதுபோல் நாம் நோக அதன் பயனைக்காண்பதில்லை. உலகில் சிராத்தம் முதலிய கன்மங்களில் பயனைக் கண்கூடாகக் கண்டதுண்டா ? அல்லது அனுமானிக்கத்தான் கூடுமா ? சப்தப்ரமாணமாத்திரத்தால் விஹிதமானதும் பயனற்றதாயுமிருப்பின் எவர் நம்புவார் ? பயனற்ற விஷயத்தில் மாந்தரும் முயலாரென ஆன்றோர் மொழியல்லவா? இதில் சில பயன் இருக்கவேண்டும் என்றால் அதெது என்பது முதலிய ஆசங்கைகள் கிளம்புகின்றன. இவைகளுக்கு சூக்ஷ்மபிரயோஜனம் இது என்பதைப்பற்றி விரிவாய்க் காட்டவேண்டுவதே சமாதானம். இதேவிடத்தில் ஒவ்வொரு கன்மத்துக்கும் பயன்களையிங்கே எடுத்துக்காட்டசமயமில்லாததால்பிரகிருதத்திலிறங்குவோம்.

கர்மம் இருபிரிவடையும். மறுமைப்பயனுடைத்து இம்மை பயனுடைத்து என்பன. இம்மைப்பயனுள்ளன-கை கால் முதலியவை கழுவுதல் முதலியன. ஸந்தியாவந்தனம் முதலியவை மறுமைப்பயனுள்ளன. இருவகை கன்மங்களும் இன்றியமையாததே. அனேக கன்மங்களுக்கு இம்மையிற்றானே நற்பயனை அல்லாது தீயபயனை பார்க்கிறோம். கன்மங்களைப்பற்றி புத்தியுள்ளவன் அறியவேண்டிய ஸூக்ஷ்மப்பயன்கள் பலவுண்டு. இவ்விஷயங்களை ரிஷிகளே அறிவார்கள். அது அகன்மம், விகன்மம்,கன்மமெனப்பிரியும். எதை அனுஷ்டித்தால் புண்யம் பாபம் இரண்டுமுண்டாகாதோ. (உதாரணமாக, விக்கல் சிரித்தல் முதலியன) அது அகன்மம். அனுஷ்டிப்பதால் பாவம் பெறுவது விகர்மம். (உதாரணம் திருடுதலும், பிறர் மாதரை விரும்புதலும் தன் வர்ணாசிரமங்களைக் கடந்து நிற்பதும், அவைகளை மாற்றுதலும், இதில் அடக்கவேண்டியது. இதன் பயன் நாகயாதனை ஓயாப்பெரும் சம்சாரம்.) மூன்றாவதான கர்மம் மூன்று பிரிவடையும். நித்யம், நைமித்திகம் காம்யம் என. இவற்றுள் நித்யமென்பது விட்டால் பாவத்தை விளைவிக்கும். செய்தால் விட்டதாலுண்டாகும் பாவத்தை ஒழிக்குமேயன்றி வேறில்லை. நைமித்திகம் நிமித்தம் கண்டவிடம் செய்வதால் பயன்தரும். செய்யாவிடில் குற்றமா

கும். காம்யம் என்பது செய்தால் நற்பயனையளிக்கும். செய்யாவிடில் குற்றமாகா, இவைகளைச்செய்தவன் குணமடைவான். ஆயினும் மூன்றுவிதமான கர்மங்களும் அவசியம் அனுஷ்டிக்கவேண்டும். இவைவிட்டால் நமது மனம் சரீரம் இவை சுத்திபெறவேண்டியதற்கு வேறு வழியில்லை. ஆகையால் அதற்கனுகுணமான கர்மாக்களைச் செய்து சித்தசுத்திபெற்று ஸபலமடைய வேண்டுமென்று கோரப்படுகிறார்கள்.

சுபம்! சுபம்!! சுபம்!!!

K. R. வைத்யனாதசாஸ்திரீ,
மேலக்காவேரி.

---

## மாக மாஹாத்மியம்.

“व्रतेचान्द्रमसं शस्तं” விரதானுஷ்டானங்களுக்கு சாந்திரமானம் சிறந்தது என்பதால் தைமீ அமாவாஸ்யை சென்ற மறுதினம் முதல் 30-நாள்கள் மறு அமாவாஸ்யை முடிய மஹாபுண்ய தினங்கள். இவைகளே மாகமாஸம். இத்தினங்களில் மானிட ஜன்மமெடுத்த எவரேனும் சூரியன் உதிக்கும் தருவாயில் எந்த தீர்த்தத்திலேனும் ஸ்னானம் செய்திடில் அவர்கள் எவ்வளவுபாபம் செய்தவர்களாயினும் அப்பாபங்கள் பறந்தோடிவிடுகின்றன. இதில் பிரயாகை என்னும் அலகபாத் முக்யமானது. பிறகு கங்கை, காவேரி, பினாகினி, முதலிய அவாவர் ஊரிலுள்ள ஸ்னானத்துக்கு உரிய தீர்த்தங்கள் வரையில் சிறந்தனவே. இந்த மாக ஸ்னானச் சிறப்பை பார்வதிதேவிக்கு பரமேசுவரன் 30-அத்யாயங்களால் அருள்புரிந்திருக்கிறார். அதிலுள்ள உபாக்யானங்கள் தர்மம் நிறைந்ததும்கேட்கக்கூடியவைகளுமேயாகும்.ஸ்னானம்செய்ய சக்தியற்றவர்கள் இந்த மாகமாஹாத்மியத்தைக் கேட்டாலுமே அப்பலனை அடைகிறார்கள்.மேற்படிஉபாக்யானங்களில்ஓர்பிராமண யுவதீ, மாங்கல்யமடையும் காரணமும், இந்திரனுக்கு கழுதை உருவம் நீங்குவதும், கருங்காலி மரமாயிருந்த அரக்கன் தன் வம்சத்திலுதித்தோன் செய்த மாகஸ்னானத்தில் விடுதலையடைகிற கிறதும் குறிப்பிடக்கூடியது.

ஆகையால் ஆஸ்திகசிகாமணிகள் இந்துக்களுக்கேற்பட்டதும், இகலோகபாலோக சாதகமுள்ளதுமான நற்கருமங்களை இயன்றவரை புரிந்து சிரேயஸ்ஸைப் பெறும்படி இறைவன் அருள்புரியவும்.

" கிருஹ்யக்ஞ " வி. உமாமகேசுவர சாஸ்திரீ.

---

# வைச்வதேவ ரகஸ்யம்.

கிருஹஸ்தர்கள் தேவயக்ஞம் முதலியவற்றைச்செய்துமுடித்த பின்பு அவற்றின்சேஷமாய் அமிர்தமெனப்படுகின்ற அன்னத்தை போஜனம் செய்யுந்தன்மையுடைய நல்லோர்கள். பிராணிஹிம்ஸை நேரிடுகின்ற அடுப்பு முதலிய ஐந்து இடங்களிலும் உண்டாகின்றனவும் (அறியாது நிகழும்) தவறினுல் நேர்ந்த (பிராணி) ஹிம்ஸை முதலியவற்ருல் வருகின்றனவுமான எல்லாப்பாவங்களாலும் விடப்படுகிருர்கள். தம்மையே (தனது உடலையும் இந்திரியங்களையும்) வளர்ப்பவராய்த் தமக்காகவென்று சமயல் செய்துகொள்ளும் மற்றவரோ தாங்களும் பாவிகளாகிப் பாவத்தைக் கொள்ளுகிருர்கள் என்பதே கீதாசாரியரின் உபதேசம்.

यज्ञशिष्टाशिनस्सन्तो मुच्यन्ते सर्वकिल्बिषैः ।
भुञ्जते तेत्वघं पापा ये पचन्त्यात्मकारणात् ॥ என்று

அந்த ஐந்து ஹிம்ஸாஸ்தானங்கள். 1. அடுப்பு. 2. அரிவாய்மணை. 3. அரைக்கும்யந்திரம். 4. தண்ணீர்குடம். 5. துடைப்பம்

पञ्चसूना गृहस्थस्य वर्तन्तेऽहरहस्सदा ।
खण्डिनी पेषिणी चुल्ली जलकुंभउदस्करः ॥ यमः ॥

கிருஹஸ்தனுக்கு தினந்தோறும் ஐந்துவிதமான பாபங்கள் ஸம்பவிக்கின்றன. 1. கண்டினீ. 2. பேஷிணீ. 3. சுல்லீ. 4. ஜலகும்பம். 5. மார்ஜினீ என. இவைகளில் கண்டினீஎன்பது உரல் உலக்கைகளைக் குறிக்கும். அனேகமாய் எந்த யந்திரங்களால் மனிதர் போஜனம் செய்யத்தக்க தான்ய முதலிய வஸ்துக்களின் தோல்களை விடும்படி செய்யப்படுமோ அவ்வகையான எல்லா யந்திரங்களுமாம். 2. எந்த யந்திரத்தில் ஒவ்வொரு வஸ்துவையும் பொடிசெய்து உபயோகப்படுத்துவாரோ அது பேஷணீ,

அதாவது அம்மிக்கல், குழவி, எந்திரம், கலுவம், பிடிகுழிவி முத லியவைகள். 3. சுல்லி என்பது சமைக்குமிடம். பாகத்துக்குஉப யோகமான அக்னியிடும் ஸ்தலம். இதனல் கணப்பு, குமுட்டி இவைகள் சங்கிரகிக்கப்படும். 4. எந்த பாத்திரத்தில் அடுப்பின் மேல் வைத்தாவது வைக்காமலாவது பதார்த்தங்கள் தண்ணீரில் கலந்து பாகம் செய்யப்படுகின்றனவோ அது ஜலகும்பம். இத ஞல் கஷாயபாத்திரங்கள் வென்னீர்த் தவலைகள் முதலியன குறிக் கப்பட்டன. 5. எதனுல் குப்பை முதலிய கச்மலங்கள் ஒருங்கு சேர்ந்து ஒதுக்கி ஒழிக்கப்படுமோ அதுவே மார்ஜினீ. இதில் விசிறி, ஊதுகுழாய் முதலியவை அடங்கும். இவ்வைந்து ஸ்தா னங்களில் பிராணிஹிம்ஸை எவ்விதத்தாலும் ஸம்பவித்துவிடுகிறது.

உலகில் எந்தப் பிராணிக்காவது பிராணனைத் துலைப்பதற்கு ஹேதுவான செய்கையே ஹிம்ஸை எனப்படும். அவ்வித ஹிம் ஸை மனிதரால் எவ்வளவு சாத்யமோ அவ்வளவு ஒழிக்கவேண் டும். அன்னத்தைப் புஜித்து இறக்கும் மனிதருக்கும புல் பூண்டு செடி கொடி மரங்கள் இல்லாமல்போனல் பிராணதாரணம்செய்ய முடியாது. ஆகையால் அவைகளைப் பாகம் செய்தால் அனேக வித தோஷம் ஸம்பவிக்கும். பக்வம் செய்யாது பச்சையாகத் தின்றால் அவை ஆரோக்யத்திற்கு மிகவும் மாறுபாடாகும். அவற் ருலும் பாவம் வந்தே தீரும். பல் முதலியவற்றில் பட்டு பாகம டையாமல் எதுவும் ஹிருதயதேசமடையாது. ஆகையால் பிராணி விசேஷங்களை எப்படியாவது சிறிது ஹிம்சிக்கவேண்டியது அவ சியமாகவே நேர்ந்தது. ஆகையால் கருணையுள்ளோருக்கு உற்று நோக்கினல் ஆஹாரத்தைஒழிக்கவேண்டியதே அவசியமாகநேர்ந் தது. இவ்விஷயம் அறிந்த நமது ஆர்யசிரேஷ்டர்கள் முக்யமாக காய், கனி, கிழங்குகளையே ஆஹாரமாக்கினர்கள். நெல் முதலிய வைகள்முதிர்ந்து தானுகஉலர்ந்துபோகுமளவில் தொடாமல்,பிறகு அவைகளை எடுத்துப் புசிப்பது ஹிம்ஸை அவ்வளவாகாதெனக் கருணை நிறைந்த அறிஞர் அதையே முக்யபோஜனமாகக்கொண் டனர். ஔஷதிகளின் பழங்களும், மரங்களின் பழங்களும் அவரால் கூடியவரையில் ஜாக்ரதையாகவே உட்கொள்ளப்படுகின் றன. இவ்விதம் எந்தவிதமாவது ஹிம்ஸையில்லாமல் போஜனத் தை நிறைவேற்ற நினைத்தாலும், சில காரியங்களுக்காக பூமியின் சிலபாகத்தை வெட்டிக்கொத்தி வேலை செய்யும்பொழுது அனே

கம் பிராணிகளை ஹிம்ஸிக்க நேருகின்றது. பாருங்கள்! கலப்பை முனையினாலும் பாம்பு முதலியவைகளை அடிக்கும் வகையாலும் பல ஜந்துக்கள் மடிகின்றன. நிலத்தில் விழுந்தால் மீண்டும் முளைக்கக் கூடிய பல பதார்த்தங்கள் வறுக்கப்பட்டு பொடி செய்யப்பட்டும் வேகவைத்தும் உபயோகிக்கப்படுகின்றன.

ஆகையால் கீழ் கூறப்பட்ட ஐந்துவகையான பீடை செய்வது ஸூக்ஷ்மதிருஷ்டியாய் பார்ப்பவர்களுக்கு பெரும்பாவமேயாகும் என்று அதை ஒழித்திடவேண்டி வைச்வதேவமென்ற கர்மா ஏற்படுத்தப்பட்டது.

विश्वेदेवाः सर्वे देवाः यत्र आराध्यन्ते तत्र वैश्वदेवम् ॥

எக்கன்மத்தால் எல்லாதேவரும் ஆராதிக்கப்படுவரோ அதுவே வைச்வதேவம் என்பதாகும். அல்லது விச்வதேவர் என்ற சில மகரிஷிகளால் கண்டுபிடிக்கப்பட்ட கன்மமெனவும் கொள்ளலாம். அவைகள் தேவயக்ஞம், பிதிர்யக்ஞம், பூதயக்ஞம். மனுஷ்யக்ஞம் பிரம்மயக்ஞமென ஐந்துவகைப்படும். இவற்றுள் தேவயக்ஞம் அக்னியில், பிரம்மயக்ஞம் வாக்கில், பிதிருயக்ஞம் தரையில், பூதயக்ஞம் வீட்டின் வெளிப்புரத்திலும், மனுஷ்யக்ஞம் வீட்டின் உட்புரத்திலும் செய்யவேண்டியதாகும்.

தேவயக்ஞத்தை அக்னியில் செய்தால் அக்னியைக்கொண்டு செய்த பாபம் விலகும். பிதிருக்களுக்கு நிலத்தில் கொடுப்பதால் நிலத்தில் நாம் செய்யும் ஹிம்ஸை தொலையும். பூதங்களுக்குப் பலி கொடுப்பதால் அவைகளுக்குச் செய்ய நேர்ந்த ஹிம்ஸை விலகும். மனிதருக்கு அன்னம் கொடுப்பதால் ஜீவகாருண்யமுண்டாகும். பிரும்மயக்ஞம் என்ற வாசிகயக்ஞத்தால் மனிதன்வாக்கால் மற்றவர்புண்படச் செய்த பாவம்நீங்கும். இந்த வைச்வதேவத்தில் விநியோகப்படுத்தப்படுகிற மந்திரங்களில் காக்கை, நாய்கள், எறும்பு, மற்ற புழுக்கள், பசுக்கள், பறவைகள், முதலிய அன்னமருந்தக் கூடிய யாவருக்கும் அன்னதானம்செய்யவேண்டுமென்பது புலப்படும்..

ஆரியர்களே ! விக்ஞானவல்லபர்களான நமது பெரியோரின் பெருமையை ஆலோசித்துப்பாருங்கள். ஒருகிரஹஸ்தன் தன்அன்னத்தை எதிர்பார்க்கும் எவ்வகைப் பிராணிக்கும் அன்னமளித்து பிறகே தான் புஜிக்கவேண்டுமாம். ஒருவனுகத் தனித்து அன்ன

மருந்தும் மனிதனை வேதம் நிந்திக்கின்றது. தனியே புசிப்பவன் பாபியாவான்

अघं स केवलं भुङ्क्ते यः पचयात्मकारणात् ॥

மேலும் பசித்தவருக்கே அன்னம் கொடுக்க வேண்டுமென நிர்பந்தமட்டுமல்ல. மற்றும் யதியும் பிரும்மசாரியும், பக்வான்னாதிகாரிகள் என்று சொல்லியிருப்பதால் இவ்விருவருக்கும் அவச்யம் அன்னம் கொடுத்தே தீரவேண்டுமென விதித்திருக்கிறது.

ஆதி ஆச்ரமமாகிய பிரும்மசர்யத்தில் வித்தையும் சரமாச்ரமமாகிய ஸன்யாஸாச்ரமத்தில் ஞானயோகங்களும் அவச்யம் அப்யசிக்க வேண்டுமாதலால் அவர்களுக்கு அன்ன விசாரமுண்டானால் அவர்களுக்கு ஆச்ரமதர்மம் கைகூடாது. ஆகவே பாதகண்டத்தின் பெருங்குலதனமான யோகவித்தையும், வேத வித்தையும் பாழாகும். கிருஹஸ்தன் ஒரு பாத்திரத்தில் அன்னம் சமைத்தால் அதில் புருஷன் ஆகாரமவ்வளவு எடுத்து வைசுவதேவ பலி ஹோமங்களுக்கு வைககவேண்டும். பாக்கியுள்ளவையில் பிரம்மசாரிக்கு ஒரு கபளமும், மிகுந்ததைத் தனது உபாஸ்யதேவதைக்கு நிவேதனம் செய்து அதைத் தானும் தனது தாஸவர்க்கங்களும், குடும்பமுமாகப் புஜிப்பது ஆன்றோர் வழி. அதிதிகளுக்குஎன்றுஎடுத்து வைத்த அன்னத்தை வேறுபடுத்தி அபரான்னகாலம் முடியும் வரையில் அன்னத்துக்குரியவர் எவரும் வாரவிடில் அந்த அன்னத்தை தம்மினத்தவருக்கு உபயோகிப்பது நமதார்யர்களின் வழக்கம். இந்தப்படி விதிவழுவாது நடந்து தன்னால் செய்யப்பட்ட ஹிம்ஸையிலிருந்து விலகி புண்யபுருஷர்களாக விளங்கி வந்தனர். ஆகையால் மனிதப்பிறவி பெற்ற நமக்கு முக்கியமான கர்மம் வைச்வதேவமாகும். கீழ்சொன்னபடி பிரம்மசாரி யதிகளுக்கு அன்னதானம் செய்வதுடன் நில்லாமல் தேவதைக்கும் பிதிருக்களுக்கும் செய்யவேண்டும். நமதார்யர்கள் தேவபக்தி பிதிருபக்தி நிறைந்தவர்களல்லவா? இதன் பிரயோஜனம் அன்ன சுத்தி அந்தக்கரணசுத்தி, ஆத்மசுத்தி, எனவாம். 1. அன்ன சுத்தியாவது அன்னத்தை அக்னியில் போடுவதாலும் காக்கை முதலியவைகளுக்கு இடுவதாலும் நிர்விஷத்வ பரீக்ஷை. 2. அந்தக்காண சுத்தி- வைச்வதேவகிரியையில் சகல ஹோமமென்று ஒரு சிறிய கிரியையுண்டு. இதே சகல பாபநிவர்த்திக்கு உபயோகமாகும்.

இதனாலும் கீழ் கூறப்பட்டபடி தன்னை அண்டியவரின் பசி தீருவதாலும், அதிதி திருப்தி அடைவதாலும், தன் மனமும் திருப்தி அடையும் இதுவே அந்தக்கரண சுத்தியாம். 3. ஆத்மசுத்தி என்பது சரீரசுத்தி, முன் சொன்னபடி தேவதாநிவேதனம் செய்து வேதநிஷ்ட பிரம்மசாரிகளாலும், கர்மநிஷ்ட அதிதிகளாலும் ஸேவாநிஷ்ட தாஸ ஜனங்களாலும் புஜிக்கப்பட்ட மிகுதியைபுஜித்தால் அது மனதை நிர்மலப்படுத்தும். ஆகையால் சரீரம் ஆத்மா இவை சுத்தியடைய இக்கன்மா ஏற்பட்டது. போஜனமில்லாத காலத்தில் இதை நீரால் நடத்துவதுண்டு. இப்படி இக்கன்மத்தின் பயன் விரிந்துகொண்டே போகும். ஆர்யர்களே இதைச் சற்று கவனித்து சிறப்புகளுக்கு காரணமாயும், கலிதோஷத்தை அப்புறப்படுத்துவதும் தர்மவிருக்ஷத்தின் விதையையும் விவேகிகளால் விரும்பப்பட்டதாயுமுள்ள இந்த கர்மத்தை அனுஷ்டித்து புனிதர்களாகி பகவத்பக்திசெய்து ஜன்ம ஸாபல்யமடையும்படி வேண்டப்படுகிறது. சுபம் !

மீமாம்ஸா சிரோமணி, K. R. வைத்தியநாதசாஸ்திரி,
மேலக்காவேரி.

---

# ஆஹாரநியமம்.

(15-வது பக்கத்தொடர்ச்சி)

அவைதிகர்களான நாஸ்திகர்களின் கொள்கைப்படி கேவலம் சரீரதாரணத்திற்கும் நாக்கு முதலிய இந்திரியங்கள் திருப்தியடைந்து தம் தம் நிலைமையிலிருப்பதற்கும் மட்டுமே அன்னபானாதிகள் மனிதர்களுக்கு அவசியம் என்கிற அபிப்பிராயத்துடன் வைதிகர்களான நாம் அன்னபானாதிகளை உபயோகிக்கவில்லை. ஆனால்—

यत्करोषि यदश्नासि यज्जुहोषि ददासि यत् ।
यत्तपस्यसि कौन्तेय तत्कुरुष्व मदर्पणम् ॥
सायं प्रातर्द्विजातीनामशनं विधिचोदितम् ।
नान्तरा भोजनं कुर्यादग्निहोत्रसमो विधिः ॥

பகவத்கீதையில் ஸ்ரீகிருஷ்ணன் அர்ஜுனனைக்குறித்து "நீ எதைச் செய்கிறாயோ, எதைச் சாப்பிடுகிறாயோ, எதை அக்னியில் ஹோமம் செய்கிறாயோ, எதை பிறருக்கு தானம் செய்கிறாயோ, எதைத்

தியானம் செய்கிறாயோ எல்லாவற்றையும் என்னிடம் கொடுத்துவிடு'' என்று உபதேசிப்பதால் நாம்செய்யும் எல்லாக்காரியங்களும் பகவதர்ப்பணம்ஆகவேண்டியதாகையினாலும் த்விஜாதிகள் என்றழைக்கப்படும் பிராமண, க்ஷத்திரிய, வைசியர்களுக்கு காலை மாலை இருவேளையில் மட்டுமே போஜனத்தை விதித்து அக்னிஹோத்திரத்திற்கு ஸமமாகச் சொல்லியிருப்பதாலும் அதற்குக்கட்டுப்பட்டு இதோர் புண்ணிய கர்மமென்று செய்கிறோம். அன்றியும் ஆஹாரம் சாப்பிடுவதினால் சரீரத்திற்கு புஷ்டியுண்டாகிறதும், பசி அடங்குவதும் பிரத்யக்ஷஸித்தமாகிலும், இதுவும் ஒரு வைதிககர்மாவென்றும், இதனால் அதிர்ஷ்டமான சில பிரயோஜனங்கள்ஸித்திக்கிறதென்றும், ஆஹாரவிஷயத்தில் சாஸ்திரங்களில் சொல்லியபடி நடக்கத் தவறினால் பிராயச்சித்தங்களுண்டென்பதும் நமது கொள்கை. ஆகையினால் நம்மிஷ்டப்படி எதையும் எப்பொழுதும் விதிவிலக்கின்றி உட்கொள்ளாமல் சாஸ்திரங்கள் விதித்தவற்றை உட்கொண்டும் விலக்கியவற்றைவிட்டும் போஜனரூபமான அக்னிஹோத்திரத்தினால் ஹிருதயத்தில் வசிக்கும் ஸர்வேசுவரனை ஆராதிக்க வேண்டும். நாம்உண்கிறதைப்பகவதர்ப்பணம்செய்யவேண்டுமாகையாலும் அது சுத்தமானதாயிருக்க வேண்டும். அசுத்தமான ஆஹாரத்தினால் சித்தம்கெட்டு பகவத்பக்தி குறைந்துவிடும். சுத்தமான ஆஹாரத்தினால் அன்னமயமான மனசு சுத்தப்பட்டு ஸத்வகுணம் மேலிட்டு பகவத் பக்தியும் ஸாத்விகமான குணமும் மனிதனுக்கு தானாகவே உண்டாகும் என்றும் அசுத்தமானஆஹாரத்தினால் தானாகவே மனது கலங்கி ரஜோகுணமும் தமோகுணமும் மேலிட்டு ராஜஸ தாமஸ ஸ்வபாவங்கள் விருத்தியடையும்என்றும்

आहारशुद्धौ चित्तस्य विशुद्धिर्भवति स्वतः ।
अभक्ष्यभक्षणाच्चितमशुद्धं भवति स्वतः ॥

என்கிற ஸ்மிருதி வசனத்தினால் ஸ்பஷ்டமாய் விளங்குகிறபடியால் சுத்தமான ஆஹாரத்தையே கிரஹித்து அசுத்தமானவைகளைப்பரிஹரிக்கவேண்டும். நமது ஆஹாரம் அக்னிஹோத்திரத்திற்கு ஸமமானது என்னும் ரஹஸ்யத்தை அறியாவிட்டாலும் தற்காலம் அமெரிக்காவிலும் இங்கிலாந்திலும் இரண்டுவேளைக்கு அதிகம் சாப்பிடக் கூடாதென்று உபதேசம் செய்யும் சங்கங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இருவேளைகளே புஜிக்கவேண்டும் நடுவில் காபி தேத்

தண்ணீர், கொக்கோ, முதலியபானங்கள் கூடாதென்றும் அதிகாலையில் போஜனம் கூடாதென்றும் ஒவ்வொரு மாதத்திலும் சில தினங்கள் உபவாஸமிருந்தால் சரீரத்திற்கு விசேஷ நன்மையுண்டென்றும் டாக்டர் லூயி என்பவர் ஒரு புஸ்தகம் எழுதியிருக்கிறார். ஆகையால் சுத்தாஹாரத்தையே உட்கொள்ள வேண்டும்.

(தொடரும்) வெ. ஸ்ரீநிவாஸதாதாசாரியார்.

---

## காட்டுமன்னார் கோவில்

# பிராமண ஸபை.

ஸ்ரீ காஞ்சிகாமகோடிபீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள் அனுக்ரஹத்தை முன்னிட்டு சென்ற 24-5-30 ல் ஸ்தாபிக்கப்பட்ட ஷை ஸபையால் நடந்த வைகுண்ட ஏகாதசி புண்ய காலத்தில் நடத்திய "அவிச்சின்ன உபாஸனா விருதத்தில் பகல் 3-மணி முதல் வேதபுஷ்கரிணீ காயத்ரீஜப மண்டபத்தில் பிரம்ம ஸ்ரீ கிருஹ்யக்ஞ வி. உமாமகேசுவர சாஸ்திரிகளால் ஏகாதசி மாஹாத்மியம் நன்றாக உபன்யஸிக்கப்பட்டது. பிறகு கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### தீர்மானங்கள்.

1. ஸ்ரீ வீரநாராயணஸ்வாமி தேவஸ்தானத்தில் பஞ்சபர்வாதி உத்ஸவகாலங்களில் நின்றுபோயிருக்கிற வேதபாராயணத்தை மறுபடியும் நடத்தும்படி ஷை ஸபா அபிப்பிராயப்படுகிறது.

2. யூனியன் சிப்பந்திகளான குறவர்களால் தெருக்களில் அருவருப்புக்கொடுக்கும்படி செய்யப்படுகிற, காக்கை, அணில், முதலிய ஜீவஹிம்ஸைகளைத் தடுக்கும்படி ஷை சிப்பந்திகளை எச்சரிக்கை செய்யும்படி ஸபைகோருகிறது. மேற்கண்ட தீர்மானத்தின் நகல்கள் அந்தந்த அதிகாரிகளுக்கு அனுப்பும்படி ஸபைத் தலைவருக்கு அதிகாரம் கொடுத்தும் மாலை 5-மணிக்கு ஸபை இனிது முடிந்தது.

சுபம்!

வெங்கட்ராமன்

---

# வாரவிருத்தாந்தம்.

மதக்கல்யிவில்லாக்குறை:- லாகூரில் ஒரு வாரமாக கூடிய பெண்மக்கள் ஸபையில் ஆத்மக்ஞான உணர்ச்சிக்கு எற்ற முறையை பின்பற்றவேண்டுமென்று தீர்மானித்து அதே சபை விவாஹ ரத்து விஷயத்தில் பெண்களுக்கு சுதந்தரம் வேண்டும் என தீர்மானங்களைச் செய்தது. மோக்ஷமே முக்யநோக்கம். அதைப்பெற க்ஞானமே ஸாதனம். அதையடைய வர்ணாச்ரம தர்மமே வழி என நம்மனோர் வகுத்த வகையை நன்கறியாரிவர். ஆதிமுதல் பெண்களுக்கு மதப்படிப்பை ஊட்டுவதே நலம்.

கோரின் கோரச்செயல்:-ஹரிசிங்கோரென்பார் இந்தியாசட்ட சபையில்- புருஷன், நபும்சகன், வீரியம் குறைந்தவன், குஷ்டரோகியாகவும் ஆனால் பெண்கள் வேறு விவாஹம் செய்துகொள்ளலாம் என ஓர் சட்டம் கொண்டுவரப் போகிறார். விவாஹம் போகத்திற்காக என்ற அஸ்திவாரத்தின்மேல் இவர் கட்டடம் எழுப்புகிறார். பலமில்லாத அஸ்திவாரத்தையே உடைத்தெறிய நம்மனோர் முயற்சிக்கவேண்டும். உறங்கினால் கோரின் கோரச்செயல் பல பல தோன்றும். எழுங்கள் !

சாரதாசட்ட வியாஜ்யம்:- 26௳ ஸ்ரீ சீதாராமய்யரென்னும் வக்கீல் குமாஸ்தா ஷை சட்டத்தால் தம் மதக்கொள்கைகளுக்கு விரோதமேற்படுவதால் அதைத் தடுக்கவேண்டுமென ஜில்லாமுனிஸீப்பிடம் வியாஜ்யம் தொடுத்தார். பிராசிகூடர் இதை தள்ளிவிடும்படி விவாதித்தார். வாதியின் ஸ்டேட்மெண்டைப்பார்த்து மார்ச்சு 24௳ கேஸை நடத்துவதாக நியாயாதிபதிசொன்னார். கவர்ன்மெண்ட் தரப்பாக அட்வகேட்ஜனரல் ஸ்ரீ அல்லாடி கிருஷ்ணசாமி அய்யர் வாதிப்பார். தக்கவர்களைக்கொண்டு வழக்காடியும் பார்த்தல் நலம். ஆயினும் பலவிடங்களில் கூட்டங்கூடி ராஜா பகதூர் கிருஷ்ணமாசாரியார் சட்டத்தை ஆதரித்து பத்திரிகளில் பிரசுரிக்கவேண்டும்.

வர்ணாசிரமதர்மசபை:-ஸமீபத்தில் ஜோலார்பேட்டையில் ஷை ஸபை ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. உத்ஸாகத்தினால் சிலவிடங்களில் ஸபைகள் தோன்றுகின்றன. ஆனால் மாணவர்களுக்கு அவசியமான ஸந்தியா ஸதாசாரம் மதக்கல்வி இவைகளைக்கொடுக்கும் ஸபைகளே ஜீவனுள்ளவை.

மதமா? மதமா? மதாபிமானிக்குச்சண்டையில்லை. ஒவ்வொரு மதத்திலும் மனதை காமக்ரோதங்களை அடுக்கும்படி உபதேசிக் கப்பட்டிருக்கிறது. ஆழ்ந்த மதப்படிப்பும், விசால நோக்கமும், திருடமான தைவபக்தியும் இல்லாதார் காமக்ரோதங்களை மதத் தின் பெயரைச் சொல்லி விருத்தி செய்கின்றனர். வடக்கே ராவல்பிண்டிக்கு அருகில் ஓர் மஹம்மதியர் மாட்டு மாம்சம் பாகம் செய்ததாகக் கேட்டு இந்தியர் அவரைக் கண்டித்தனர். ஆத்திரங்கொண்ட அவர் நூற்றுக்கணக்கான மிலேச்சர்களுடன் அவ் விந்துக்கள் வீட்டில் கொள்ளையடித்து வீடுகளுக்குத் தீயிட்டனர். நிரபராதியான ஓர் சிக்கிய கனவான் உயிருடன் எறிந்தார்? என்ன அநியாயம்! அந்தோ! என்ன மதபக்தி!

கல்வியும் ஆசாரமும் நிறைந்த தக்ஷிணதேசத்திலே தர்மகர்த் தாக்களும் மற்றவரும் சண்டையிட்டு அரசாங்க 144-செக்ஷன் பாணத்தால்கோவில்கதவை அடைத்து பூஜை புரஸ்காரமில்லாமல் செய்துவிடுகின்றனர். அவர்களைப்பற்றி பேசவும் வேண்டுமா? இத்தீயத்தொழிலுக்கு மதம் காரணமா? அல்லது நான் என்னும் அஹங்காரம் நிறைந்த மதம் காரணமா?

தர்மம் தலைகாக்கும்:- முனிசிப்பாக இருந்து விலகிய ஸ்ரீமான் பி. எஸ். சுப்ரமண்ய அய்யர்வாள் கும்பகோணம் பெரியதெருவி லுள்ள 12ஆயிரம் விலையுள்ள தனது கிருஹத்தை குழந்தை ஆஸ் பத்திரிக்கு உபயோகப்படும்படி சாஸனம் செய்துளார். அவரது மாமனாராகிய ஸ்ரீமான் ஐயுஐயர்வாள் லக்ஷரூபாய் அத்வைத ஸபைக்குக் கொடுத்து ஓர் பாடசாலை நடத்தும்படிக்கும் அது நடக்கா விடில் ஸ்ரீ ஜகத்குரு சங்கராசார்யமடத்திற் சேர்த்துவிடவேண்டும் என்றும் எழுதி ரிஜிஸ்தர் செய்ததாக அறிந்து அளவிலா மகிழ்ச்சிய டைந்தோம். இவ்விரண்டு மஹான்களின் தியாகமும் தர்மசிந்தையும் போற்றற்கேற்றதே. "தர்மோரக்ஷதி ரக்ஷித:" என்பதைத் தவிர நாமென்ன சொல்லக்கிடக்கிறது. மற்றபிராமண தனிகர்கள் இதைக் கவனிப்பாரோ?

தடியடி.- சென்ற பத்துநாளாக சீமைத்துணி வாங்கவேண் டாமென மறியல் செய்துவரும் தேசியதொண்டர்களும் தலைவர்களும் போலீஸாரால் தடிகொண்டு அடிக்கப்படுகின்றனர். ஜீவகாருண்யம் என்பது மனிதர்களுக்குப் பொதுவாகத் தெரிந்திருக்க வேண்டியது அவசியம். ஸ்ரீவத்ஸ வெ. ஸோமதேவசர்மா,

# பத்திரிகாபிமானிகளின்பாக்கியம்.

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ சங்கராசாரியஸ்வாமிகளவாள் தமது விஜயயாத்திரையில் பலவிதத்திலும் பிராணிகளுக்குப் பரமானுக்கிரஹம் செய்து வருகிறார்களென்பதை யறியாதாரில்லை. இதுவரை நமது ஆர்யதர்மம், டிம்மி—16 பக்கங்கொண்ட ஸஞ்சிகையாய் பிரசுரமாயிருப்பதை அடுத்தவாரம் முதல், 24, பங்கங்கள் கொண்டதாகப் பிரசுரிக்கவேணுமென்று ஆசார்யாள் ஆக்ஞைசெய்து ஆர்யதர்மத்திற்கு அவயவ புஷ்டியையும் அதனால் நம் பத்திரிகாபிமானிகளின் மனஸ்ஸந்துஷ்டியையும்தந்து அருள் புரிந்தது பத்திரிகாபிமானிகளின் பாக்கியமே. அதற்கேற்றபடி ஒவ்வொரு அபிமானியும் சந்தாதாரர்களை அபிவிர்த்திசெய்து ஆர்யதர்மம் விசாலமாய் நடமாடும்படி செய்வாராக.

அன்றியும் நம்பத்திரிகாபிமானிகள் விஷயத்தில் ஆர்யதர்மம் பழைய வால்யூங்களுக்கு ஏற்படுத்தியிருந்த தாரணையைக் குறைத்து நாளது தேதி முதல் வால்யூமொன்றுக்கு ரூ- 1–8–0 வீதம் ஏற்படுத்தியிருக்கிறோம். வால்யூம்-1-முதல்-15-வரையும் சேர்ந்தாப்போல் வாங்குபவர்களுக்கு இன்னும் ஸௌகரியப்படுத்துகிறோம். காபிகள் கொஞ்சம்தானிருக்கிறபடியால் வேண்டியவர்கள் முன்னமேயே தெரிவித்துக்கொள்ள வேண்டுகிறோம். தபால் சார்ஜு வேறு, ப—ர்.